உ
சிவமயம்

அல்வாய் வடமத்தி

# குமுதெணிப் பிள்ளையார் ஆலயம்

# லதாமலர்

# தோரண வாயில்
# மணிமண்டப தீபம்





வெளியீடு

திரு.கணபதிப்பிள்ளை நவரத்தினராசா

பிள்ளைகள் - மேகரூபன், சுபீவன், நிஷரிகா

11.10.2010.











தோரணவாயில் மணிமண்டபம் அமைவதற்குமுன்னர் ஆலயத்தின் தோற்றம்




ஆலயப் பரிவாரமூர்த்திகளினதும் சண்டேஸ்வரரினதும் ஆலயங்களின் தோற்றம்



கும்பநீரை பெருமானுக்கு அபிஷேகிக்க அடியவர்கள் செல்லுங்காட்சி



மஹாகும்பாபிஷேகத்தின்போது பிரதமகுரு ஆலயத் தொண்டரைக் கௌரவிக்கும்போது



மஹாகும்பாபிஷேகத்தின்போது உபயகாரர்கள்



மஹாகும்பாபிஷேகத்தின்போது பிரதமகுரு கிரியைகளை ஆற்றிக்கொண்டிருக்கும் காட்சி



கும்பம் ஊர்வலமாக வரும்போது



சுவாமி வீதியுலாவின்போது

உ

சிவமயம்

## ஆசியுரையும் பிராா்த்தனையுரையும்

சைவசித்தாந்த பண்டிதர், அருட்பிரபாகரசீலர், சிவாகம உபதேச வாசஸ்பதி, சிவாகம வித்தியா பூஷணம்

**சிவஸ்ரீ.தியாக.சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்**

*B.A, Dip.in.Ed, M.A, Principal.*

ஸ்ரீமதி.நவரத்தினராசா லதாமலர் அவர்களின் நினைவாக அல்வாய் குமுதெணிப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் அமையப் பெற்ற தோரண முகப்பு வாசல் மண்டபமாகிய “மணிமண்டபம்” உபகரிப்பும், லதாமலர் அவர்களின் சிரார்த்தமும் சேர்ந்து பிள்ளையார் பெருமானின் திருவருளும் திருவுடைய அனைத்துச் சிறப்பையும் நல்கவேண்டும் என்று பிரார்த்தனை செய்து இந்நிகழ்வு நிறைவுபெறவேண்டும் என்று ஆசி வழங்குகின்றோம்.

சுபம்

அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார்
பரிபாலன சபையின் சாரபான

## வாழ்த்துரை

தி.செல்வநாதன்,
*தலைவர்.*

ஓம் பாலகணபதி துணை

விக்கினங்கள் நீக்கி நல்லருள் பாலிக்கும் எம்பெருமான் குமுதெணி தேவஸ்தான விநாயகரது சந்நிதானத்தில் இன்று அழகிய தோரண வாயில் மணி மண்டபம் ஒன்று அமரத்துவம் அடைந்த திருமதி. லதாமலர் நடராத்தினராசா அவர்களின் நினைவாக அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்படுகிற நிகழ்வானது எம் எல்லோருக்கும் பெரும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

இந்நிகழ்வானது எம்பெருமான் சந்நிதானத்திற்கு வருபவர்களுக்கு எல்லாம் அடையாளப் படுத்துவதற்காகும். எமது சாஸ்திர நிலையில் எம் முன்னோர் தமது பிள்ளைகளுக்குத் தாம் வணங்கும் இறைவனுடைய நாமங்களையே விரும்பி பெயர் சூட்டிக் கொண்டனர். இதனால் குடும்பங்களிலே தமது பிள்ளைகளை இறைவன் நாமம் சூட்டி அழைப்பதனால் தமது இறைவனை முன்னிலைப்படுத்தி அழைப்பதுடன் திருவருளும் கை கூடும் கைங்கரியமாக விளங்கியது. அப்பேற்பட்ட ஒரு திருவருள் நினைப்பாக இந்த மணிமண்டபம் குமுதெணி தேவஸ்தானத்தை நினைப்பில் இருத்தி சகலரதும் வழிபாட்டைத் தூண்டும் சின்னமாக விளங்குகிறது. யார் யார் எப்பேற்பட்ட காரியமாயினும் அவற்றை ஆலயங்களில் மேற்கொள்ளுகின்ற போது அக்காரியங்கள்

சரியான, காத்திரமான பயன்பாட்டுக்குரியவாறு அமையப் பெறின் அது திருவருள் கொண்டு விளங்குவதாக அமையும்.

எனவே இன்றைய இந்த கைங்கரியங்களும் இவ் ஆலயத்தின் பொலிவினை மெருகூட்டுவதுடன் திருமதி. லதாமலர் நவரத்தினராசா அவர்களை நினைவு கூர்ந்து அன்னாரது ஆன்மா எம்பெருமான் தாழடியில் சாந்தி பெறவும் இதனை முன்வந்து உருவாக்கிய அவரது குடும்பத்தினருக்கு வாழ்வு பெருகி சகல நலமும் பெற எம்பெருமான் திருவருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.



# வாழ்த்துச் செய்தி

*பரிபாலன சபை*

**குச்சம் ஞானவைரவர் தேவஸ்தானம்.**

அல்வாய் வடக்கு குமுதெணிப்பதியதனில் பிறந்து, வளர்ந்து திருமணமாகி பிறந்த மண்ணிலும், புலம் பெயர்ந்து சுவிஸ் நாட்டிலும், பின்னர் இந்தியாவில் தமிழ்நாட்டிலும் வாழ்வாங்கு வாழ்ந்து, சென்ற 22. 09. 2009 இல் இறைவன் திருவடிகளைத் தழுவிக் கொண்ட அமரர் நவரத்தினராசா- ரதாமலர் அவர்களின் மறைவின் ஒரு வருட பூர்த்தியினை நினைவுகூரும் முகமாக எல்லாம் வல்ல குமுதெணிப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் தோரணவாயில் மணிமண்டபம் அமைக்கப்பட்டிருப்பது சிறப்பாகும்.

வாழும் காலத்தில் நவரத்தினராசா- லதாமலர் தம்பதியினர் ஆன்மீகத்தில் ஈடுபபடு கொண்டவர்களாக வாழ்ந்து வந்தமை கண்கூடு, இதன் வெளிப்பாடாக ஆன்மீகத் தொண்டில் தம்மை இணைத்துக் கொண்டதன் நிமிர்த்தமாக அல்வாய் வடக்கு அரசடி வினாயகர் தேவஸ்தாண வசந்த மண்டப முன்மண்டப கட்டட நிர்மாணப் பணிகளிலும்,குடும்ப சார்புடைய பங்காளர்களாகி நின்றார்கள். இத்தகைய ஆன்மீகத்தில் நாட்டமுள்ள நவரத்தினாசா- லதாமலர் தம்பதியினரின் வாழ்வியல் முறைமைகள் எமது சமூகத்தில ’காத்திரமாக அமைந்தமை பெருமைக்குரியதே.

இதன் சிறப்பம்சமாக அமரர் நவரத்தினராசா - லதாமலர் நினைவாக அவர்களின் குடும்பம் சார்பாக குமுதெணிப்

பிள்ளையார் தேவஸ்தானத்திற்கு பேரழகினை வெளிப்படுத்திநிற்கின்றது.

மேற்படி தேவஸ்தானத்தின் அழகிய மணிமண்டபமானது காலம் உள்ளவரை அமரர் நவரத்தினராசா- லதாமலர் அவர்களை நினைத்துப்பார்க்கச் செய்வதோடு அவர்தம் குடும்பத்தாரின் இறைசார் திருப்பணியையும் நினைக்கவைக்கும். இத்தகைய அழகிய மணிமண்டபம் அமைந்தமையும், அமைந்ததையும் எண்ணி எமது பரிபாலன சபையினரும், சார்புடைய மக்களும் மிகுந்த மகிழ்ச்சியும், பாராட்டுதலையும், வெளிப்படுத்திநிற்கின்றோம்



# மாறாம்புலம் மாணிக்கப் பிள்ளையார் தேவஸ்தானத்தின் வாழ்த்துரை

மாறாம்புலம் மாணிக்கப் பிள்ளையார் தேவஸ்தானத்தைப் போல குமுதெணிப் பிள்ளையார் தேவஸ்தானமும் பழமைவாய்ந்தது. குமுதணிப்பிள்ளையார் தேவஸ்தானமும் நமசிவாயம் குடும்பமும் பின்னிப் பிணைந்தவை. நமசிவாயம் குடும்பத்தினர் அள்ளிக் கொடுத்துக் கொண்டிருப்பவர்கள். எனவேதான் பிள்ளையாரும் அவர்களுக்கு அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

அமரர் நமசிவாயத்தின் மகள் நவரத்தினராசா லதாமலர் அவர்கள் இருக்கும் பொழுதும் பிள்ளையாருக்குக் கொடுத்தார் இறந்தபின்பும் தோரணவாயில் மணிமண்டபத்தைக் கொடுத்திருக்கிறார் பிள்ளையார் நிச்சயம் அவரை ஆசீர்வதிப்பார்.

ஆலயக் கட்டமைப்பிற்கு அழகு கொடுப்பது மணிமண்டபம். குறிப்பறிந்து செயற்பட்ட நவரத்தினராசா குடும்பத்தாரை வாழ்த்துவதில் மனமகிழ்ச்சி அடைகிறோம். தோரணவாயில் மணிமண்டப உபகரிப்பு நிகழ்வின்போது சிறப்பு மலர் வெளியிடுவது சிறப்பானதாகும். எங்கள் தேவஸ்தானம் இந் நிகழ்வில் பங்கு கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றது.

ஓம் கணபதி நமக.



## அல்வாய் வடக்கு அரசடி விநாயகர் ஆலய பரிபாலன சபை தலைவரின் பிரார்த்தனை

*தலைவர்,*
**வே.சிவயோகன்**

"நற்குஞ்சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ்சரக்கென்று காண்"

குமுதெணி விநாயகனின் மணிமண்டபத் திறப்பு விழாவிற்கு ஆக்கம் ஒன்று தரும்படி அழைப்பு வந்தது. எனது மனம் எனது சிறுபராய நினைவுகளை மீட்டுக் கொண்டது. பிள்ளையார் கதை பூசையின் இறுதி நாள் பாறணைப் பூசை எனது பிறந்த வீட்டின் கிழக்கே அரசடி ஐங்கரன், வடக்கே குமுதெணி விநாயகன், மேற்கே மாறாம்புலப் பிள்ளையார், தெற்கே ஆலடிப்பிள்ளையார் இவற்றில் ஆலடிப்பிள்ளையார் தவிர்ந்த ஏனைய மூன்று விநாயகர் கோவில்களிலும் பிள்ளையார் கதைப் பாறணை தினத்தன்று சமுத்திரத் தீர்த்தமாடுவது தொன்று தொட்டு வந்த மரபு

இம்மூன்று ஆலயங்களிலும் விநாயப்பெருமான் தேரில்(கேடகம்) எழுந்தருளி ஊர்வலமாக வந்து எம்மூர் மக்களிற்கு காட்சியளித்து சக்கோட்டைக் கடற்கரையில் தீர்த்தமாடி பாறணைப் பூசையை நிறைவு செய்வார். இத்தினமானது அல்வாய் வடக்கு, தெற்கு, மேற்கு வாழ் எமது உறவினர் அனைவர்க்கும் குதூகலமான நாள். அல்வாய் உறவுகளின் ஒற்றுமையை எடுத்தியம்பும் நாள்.

நாட்டின் அசாதாரண நிலை காரணமாகவும் எம்மூர் இளைஞர் புலம் பெயர்ந்தமையாலும் சிறப்பு நாள் நிகழ்வு அற்றுப்போய்விட்டது. எனினும் அரசடி ஐங்கரனின் சமுத்தரத் தீர்த்தமானது தொடர்கின்றது.

மேற்படி புகழ் பூத்த ஆலயங்களில் ஒன்றான குமுதெணி விநாயனிற்கு அமரர் லதாமலர் நவரட்ணராசா ஞாபகார்த்தமாக அமரரின் கணவர் திரு.க.நவரட்ணராசா அவர்கள் தோரண வாயில் மணிமண்டபத்தினை நிர்மாணித்து உபயமாக கையளிப்பது இத்தம்பதியரின் சமயப்பற்றினை எடுத்துக் காட்டுகின்றது. அமரர் அவர்கள் குமுதெணியானின் இடக்கண் பார்வையிலும், அமரரின் கணவர் அரசடியானின் வலக்கண் பார்வையிலும் பிறந்து வளர்ந்தவர்கள். இதன் காரணமாக இத்தம்பதியினர் சமயப் பற்றுடன் ஆலயங்களின் திருப்பணி வேலைகளை மனமுவந்து செய்தனர். 1988ம் ஆண்டு அரசடி விநாயகனின் முதலாவது கும்பாபிஷேகத்தின்போது திரு.க.நவரட்ணராசா அவர்கள் தனது சகோதரர்களின் துணை கொண்டு எமது ஆலயத்தின் வசந்த மண்டப வாசலின் தர்சன மண்டபத்தினை மிக குறுகிய காலத்தில் அமைத்துக் கொடுத்தமை என்றும் மறத்தற்குரியதல்ல. ஆலய வரலாற்றில் இடம் பெற வேண்டியது. இப்பாரிய திருப்பணிக்கு அவரின் துணைவியார் அமரர் லதாமலர் அவர்களின் ஊக்கமும் உற்சாகமூட்டலும் காரணம். இத்தம்பதியினர் எமது ஆலயத்தின் 5ம் திருவிழா உபயகாரர்களாவார். இத்திருவிழா வருடம் தோறும் மிகச் சிறப்பாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரம் எமது ஆலய நிர்வாகத்தினர் திரு.க.நவரட்னராசா அவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறச் சென்ற வேளையில் தம்மால் நிர்மாணிக்கப்பட்ட தர்சன மண்டபத்திற்கு மாபிள் பதித்துத் தருவதாகக் கூறினார். அத்துடன் ஆலய அபிவிருத்திக்கென நிதியுதவியும் வழங்கினார். இவ்விடயமானது அமரர் லதாமலர் அவர்களின் துயரில் பங்கேற்கச் சென்ற எமக்கு சிறு உற்சாகத்தையும் தந்தது.

1997ம் ஆண்டு, அமரர் அவர்களையும் அவரது பிள்ளைச் செல்வங்களையும் இந்தியாவில் அவரது வீட்டில் சந்தித்தோம். அமரர் தமது பிள்ளைகளை பாடசாலைக்குக் கூட்டிச்

செல்வது சந்தைக்குப் போய் மரக்கறி சாமான் வாங்குவது போன்ற பல வேலைகளிற்கு மத்தியிலும் எமக்கு மதிய உணவை தயாரித்தளித்து விருந்தோம்பலின் சிறப்பை எடுத்துக் காட்டினார்.

இத்தாயானவள் தன்து சொந்த நாட்டை விட்டு புலம் பெயர்ந்து அயல் நாட்டில், சொந்த பந்தங்களின் துணையின்றி, தனியாக வாழ்ந்து தன் பிள்ளைகளின் வளர்ச்சிக்காக சிரமம் பாராது உழைத்ததை ஒரே நாளில் என்னால் உணரக்கூடியதாக இருந்தது.

கடந்த ஆண்டு அத்தாயின் மரணச்செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம்.

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ - மாநிலத்தில்
வேண்டாம் நமக்கும் அது வழியே
என்று இட்டு உண்டு இரும்"

என்று முதுமொழிக்கிணங்க ஆறுதல் பெறுவோம். அமரரின் ஓராண்டு ஞாபகார்த்தமாக நிர்மாணிக்கப்பட்ட மணிமண்டப உபயம் கையளிப்பு நிகழ்வில் அமரரின் ஆத்மா சாந்தியடைய அடியார்க்கு அருள் பாலிக்கு ஐங்கரனைப் பிரார்த்திப்போமாக.
அவர் பெற்ற செல்வங்கள் சிறப்புற வளரட்டும்.
அவர் தம் கணவரின் திருத்தொண்டு தொடரட்டும்.



## தொண்டர்தம் அடிச்சுவட்டில்...


*வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய பரிபாலனசபையினர் சார்பாக*

**மா.கிருஷ்ணகாந்தன்.**

*தலைவர்.*


"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" இது அனுபவித்து உணர்ந்து தெளிந்ததன் விளைவாக உண்மையின் வெளிப்பாடான ஆன்றோரின் அமுத வாக்கு. கோயில் என்பது வெறும் வழிபாட்டுத் தலம் மட்டுமல்ல அது அமைந்துள்ள பிரதேசம் சார்ந்த மக்களின் பண்பியற் கோலங்களான ஒற்றுமை, கட்டுப்பாடு, புரிந்துணர்வு, விருந்தோம்பல் போன்றவற்றின் ஊற்றுக் கண்ணாகவும் விளங்குகின்றது. கோயில்களின் ஊடாகத்தான் நீண்ட நெடுங்காலமாக கலைகள் கலாசாரங்கள் போன்றவை வளர்த்தெடுக்கப்பட்டும் வந்துள்ளன. குறிப்பாக இசை, நடனம், ஓவியம், சிற்பம் போன்ற கலைகளின் களமாகவும் தளமாகவும் கோயில்களே விளங்குகின்றன.

இன்று ஆயிரமாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் தஞ்சைப் பெருவுடையார் கோயிலைக் கட்டுவித்த மும்முடிச் சோழமன்னன் ராஜராஜன் இன்றும் பேசப்படுகின்றான் போற்றப்படுகின்றான் என்றால் அதற்கு அக்கோயிலின் கட்டிடக் கலை நுட்பங்களும் அவனது நிர்வாகத் திறமையும் தமிழ் மொழியை வளர்க்க அவன் மேற்கொண்ட நடவடிக்கைகளுமே காரணமாகும். அத்தோடு சக்கரவர்த்தியான

தனக்குரிய அரண்மனையை வெறும் செங்கற்களாலும் பெருங்கோயிலை என்றுமே அழியாத கருங்கற்களினாலும் அமைத்திருந்தான் எனும்போது ஆண்டவன் மீது அவன் கொண்ட வைராக்கியமாக பக்தியே வெளிப்படுகின்றது.

இதேவாறு இந்த அலைவாயில் கிராமமான குமுதெணியின் மூத்த தொண்டர்களுள் ஒருவரான சின்னட்டி நமசிவாயம் என்பவரது கோயில் நடவடிக்கைகளையும் நாம் நோக்கவேண்டியுள்ளது. அவர்களது குலதெய்வமான அக்கோயில் ஒரு சிறு தெய்வ வழிபாட்டுக் கோயிலாகவே பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. காலப்போக்கில் சிறுகச் சிறுக அதனைக் கட்டியெழுப்பும் கைங்கரியங்களில் தம் உறவுகளோடு மேற்கொண்டிருந்தார். அவர் கைக்கொண்டிருந்த ஆன்மீக உணர்வும் இறைவழிபாடும் தொண்டுகளும் அவருடைய வாரிசுகளிலும் உணரப்பட்டமை அவர் செய்த பூர்வபுண்ணியப் பலனாகும்.

அந்த வகையில் அன்னாரின் வாரிசுகளும் ஏனைய ஆலயத்தொண்டர்களும் இணைந்து 2004ம் ஆண்டு இக்கோயிலை ஆகம முறைப்படியான முழுக்கோயிலாக அமைத்து முறைப்படி கும்பாபிஷேகம் நடாத்தி முடித்துள்ளமை சிறப்பானதாகும்.

இவை யாவற்றையும் விட மேலானதும் உயர்வானதுமான ஓர் நிகழ்வுதான் இன்று பூர்த்தியாகி அதில் நாமெல்லோரும் உணர்வு பூர்வமாகக் கலந்து கொண்டிருக்கின்றோம். அது தான் தோரண வாயில் மணிமண்டபம். இதன் சிறப்பையும் அழகிய வடிவமைப்பையும் நோக்கும்போது அதை உருவாக்கி உபகரிப்பதற்கு உந்துசக்தியாகவும் உறுதுணையாகவும் விளங்கிய திருமதி.லதாமலர் நவரத்தினராசா அவர்கள் எமது மனக்கண்ணில் நிழலாடுவது தவிர்க்க முடியாததாகின்றது.

ஆண்டவன் காலடியில் தான் சென்றடையப்போகும் அந்த நிலையை உணர்ந்த வேளையிலும் அவர் தனது துணைவனிடம் உதிர்த்த வேண்டுகோள் வார்த்தைகள் இம்மண்டபத் திருப்பணிக்கான கால்கோள் என்றால் அது மிகையல்ல. தான் விடைபெறப்போகும் தருணம் நெருங்கியதை உணர்ந்ததும் தனது துணைவனை அழைத்து தன்னிடமுள்ள ஒரு தொகைப் பணத்தினைச் சுட்டி "இது எனக்கு எனது குலதெய்வம் குமுதெணி விநாயகனே அளித்தான் என்றும் இது மட்டுமல்ல எல்லாமே அவன் எமக்குப் போட்ட பிச்சை தான். எனவே இதனைக் கொண்டு அவனுக்கு

மேற்போன்ற மண்டபத்தினை அமைத்து எனது ஆன்மாவை அவன் நிழலில் அமைதியாக உறங்கவையுங்கள்" எனக்கூறிய அந்த வார்த்தைகளை ஏற்று அவரது துணைவரும் உடன்பிறப்புக்களும் இதனை நிறைவேற்றியுள்ளமை பெருமைக்குரிய கைங்கரியமாகும்.

எல்லாப் புகழும் இறைவனுக்கே என்ற அடிப்படையில் வாரண முகத்தவனுக்குத் தோரணவாயில் மணிமண்டபம் அமைத்த அந்த உயர்ந்த உள்ளத்திற்காகவும் இந்நிகழ்வு சிறப்படையவும் எமது வாழ்த்துக்களைக் கூறுவதோடு எமது வதிரிக் கிராமத்து மக்களோடு இணைந்து பூவற்கரை விநாயகனே துணைநிறுத்திப் பிரார்த்திக்கின்றோம்.



# குமுதெனியான் நன்கு கொடுப்பான் தனக்கான கருமங்களையும் ஆற்றுவிப்பான்

*குமுதெனிப் பிள்ளையார் ஆலயத் தொண்டர்கள் சார்பில்*
ந.கிருஷ்ணானந்தம்

அதிசய விநாயகர் துணை

*ஆர்ப்பரிக்கும் கடலருகே ஆதிமுதலாய் அமர்ந்திருந்து*
*கூர்விழியால் பார்ப்பவனே குமுதெனியை – சார்ந்திருந்து*
*கதியளிக்கும் மூலவரே காவலனாய் வழிகாட்டுமெம்*
*அதிசய விநாயகனே அருள்.*

"மேன்மை கொள் சைவநீதி விழங்குக உலக மெல்லாம்"

இந்து சமயம்:-

இந்தச் சமயம் என்றோ தோன்றிவிட்ட முதல் சமயம் பின்னால் வந்தவர்களே இதற்கு 'இந்து சமயம்' என்று பெயரிட்டு அழைத்தார்கள். எந்தச் சமயத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர்கள் தத்தம் சமயத்தை நன்கு அறிந்தவர்கள் மூலம் ஓரளவு என்றாலும் அறிந்தவர்களாக இருக்கவேண்டும். சொந்தச் சமய அறிவு மாத்திரம் போதாது அந்தச் சமயத்தைப் பின்பற்றி வாழவேண்டும். உபதேசம் செய்வதைக் காட்டிலும் உதாரணமாக

நடந்து காட்ட வேண்டும். பஞ்சபுராணம், போற்றிப்பயன்கள் போன்ற தெய்வப்பாடல்களை, கற்று, கற்பித்து பாடல்களின் கருத்துக்களை விளங்க வைப்பின் பக்தர்களின் மனதில் தெய்வ நம்பிக்கை மேம்படும். மதங்கள் எல்லாம் நதிகள் போல் பரம்பொருள் என்ற கடலில் தான் ஐக்கியமாகின்றது. எம்மதமும் சம்மதம் என்று பொதுவான கருத்துக் கொண்ட அறிவாளிகள் கூறியுள்ளார்கள். ஆலயத்தொண்டுகளில் பலவகையுண்டு ஆண்டவன் இதைத்தான் செய்ய என்று திணிக்க மாட்டார். நாம் மனமுவந்து செய்வதையே ஏற்று பக்தர்களுக்கு அருள் தருவார் என்பது நம்பிக்கை. நம்பிக்கைதான் வாழ்க்கை நல்லதை நினைத்து நல்லதையே செய்ய வேண்டும்.

## குமுதெணி விநாயகர்

தன்னை நம்பினோரை தன் வசப்படுத்தி கருணைபுரிந்து செல்வங்கள் கொடுத்து பக்தர்கள் மூலம் தன்னையும் மேம்படுத்தி வளமுடன் வாழவைக்கும் அதிசய விநாயகரே குமுதெணியான்.

2002ம் ஆண்டு இவ்வாலயத்தை புதிதாய்க் கட்டவேண்டும் என்ற நோக்கத்தோடு ஓர் வரைபடத்தை ஆசாரியார் மூலம் பெற்றுக் கொண்டோம். பலருக்கு வரைபடத்தைக் காட்டினோம். சிலர் எப்படிச் செய்து முடிப்பீர்கள் என்று வினா எடுத்தார்கள். ஆனால் ஆலயத் தொண்டர்களாகிய எங்களுக்கு மனதில் எவ்வித அச்சமும் இல்லாமல் நம்பிக்கையான உற்சாகத்தைப் பிள்ளையார் தந்து இருந்தமையால் ஆலயப்பற்றாளர்கள் மூலம் திருப்பணி சிறப்புற செய்து முடிக்கப்பட்டது. ஆலயத்திருப்பணி செய்த சிலருக்கு ஆலயமே தெரியாது. குமுதெணிப் பிள்ளையார் என்று தான் தெரியும். இங்கு சிறப்புப் பூசையாகப் பிள்ளையார் கதைப் பூசை (பெருங்கதை) சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. இறுதி நாள் பாறணை அன்று பிள்ளையார் கேடகத்தில் அமர்ந்து வீதிவலம் வந்து எல்லோருக்கும் கருணைபுரிவார்.

பலகாலமாய் எழுந்தருளிப்பிள்ளையார் இல்லாத காரணத்தால் சாத்துப்படி கட்டுப் பிள்ளையாரையே பாவித்தோம். இறைவனுக்கும் கால நேரம் என்று உண்டு. இவ்வேளை ஆலயத்தொண்டர்களில் ஒருவராகிய குமுதெணி நவரத்தினராசா லதாமலர் தம்பதிகள் சிறந்த அழகான எழுந்தருளிப் பிள்ளையாரைக் கொடுத்துக் கேடகத்தை அழகு படுத்தினார்கள். இத்தம்பதியினர் சிறப்புப் பூசைகள், மாதப் பூசைக் காசுகள், மற்றும் தேவைக்கேற்ப

உதவிகள் எல்லாம் செய்து வருகின்றார்கள். ஆலயக் கட்டிடத் திருப்பணிக்கு ஆலோசனைகளும் ஆதரவான வார்த்தைகளும் கூறி சகோதரர்களுடன் சேர்ந்து பல கட்டிடங்களை கட்டிமுடிப்பதற்கு தங்கள் முழுப்பங்கைச் செய்து உதவினார்கள். கோயில் தேவைக்கு தங்கள் காணியின் இளநீரை வழங்கி உதவினார்கள். நாடு கடந்து வாழ்ந்தாலும் குமுதெணிப் பிள்ளையார் அவர்கள் மனத்துள்ளே குடிகொண்டிருந்தார். லதாமலருக்கு சுவிஸ் வங்கியில் பலகாலமாய்க் கணவர் பணத்தை வைப்பில் இட்டு வந்தார். லதா அடிக்கடி சொல்லும் வார்த்தை "இப்பணம் தனக்கும் பிள்ளையாருக்கும் தான்" என்று. எல்லோருக்கும் உதவி செய்யும் மனம் இத்தம்பதிகளுக்கு உண்டு. சிறப்பாகவும் வாழ்க்கை நடக்கின்றது. பிறருக்கு நோய் என்றால் அவர்களுக்கு என்ன செய்ய வேண்டும், எங்கே காட்ட வேண்டும், எப்படி சுகப்படுத்த வேண்டும் என்று விளக்கம் கொடுப்பார். ஆனால் தன்னைப் பற்றி சிறிதளவும் சிந்திக்கவில்லை காலில் வேதனை, தலையில் குத்து, என்று மருந்துக் கடையில் மருந்து வாங்கிப் பாவிப்பார். பின்பு கணவன், பிள்ளைகட்கு சுகம் என்றும் சொல்லுவார்.

விதி யாரைத்தான் விட்டது காலமும் நேரமும் நெருங்கி விட்டது காலன் கயிறும் தொங்கியது. இவ்வேளைதான் கொடிய புற்று நோய் குடிகொண்டு விட்டது என்று எல்லோருக்கும் தெரியவந்தது. வைத்திய மனையில் அனுமதித்தார்கள். 10.09.2009ல் கால் எடுத்தால் உயிர் பிழைக்கும் என்று கால் எடுத்தார்கள். பின்பு சுயஅறிவு வந்தது. கணவன பிள்ளைகளிடம் தன் காலைக் காட்டிக் கவலைப்பட்டார். இரு நாட்களின் பின்பு கணவனைப் பார்த்து நான் தப்பமாட்டேன் என்பெயரில் உள்ள பணத்தை பிள்ளையாருக்கே சேருங்கள் என்று கண்ணீர் சொரிய அழுதார். 22.09.2009ல் இறைவனடி சேர்ந்தார்.

குடும்பங்கள், சொந்தங்கள், அன்பர்கள், எல்லோரும் அங்கும், இங்குமாய் நாடு கடந்து ஓடி வாழ்வதால் துக்கத்தைக் கூடிப்பகிர்ந்து கொள்ள முடியவில்லை. வேதனை மேல் வேதனை...- நல்லவர்க்குத்தான் சோதனை. என்செய்வோம் விதிப்பயனை யாராலும் மாற்ற முடியாது என மனத்தினை தேற்றிக்கொள்கின்றோம். மனைவி மரணப்படுக்கையில் கூறிய வார்த்தைகளைச் செயல்படுத்துவதற்கு ஒரு மனம் வேண்டும். மனம் நொந்து, உடல் தளர்ந்து, தான் சுவிஸ்சிலும், பிள்ளைகள் இந்தியாவிலும் என் பின் பிள்ளைகள் எதிர்காலம் என்ன? எப்படி? என்ற கேள்வி மேல்

கேள்விகள்... இவ்வேளையிலும் மனைவியின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு அமையப் பெற்றது தான் இந்த அழகிய "மண்டபம்" தோரணவாயில் மணிமண்டபம்.

இப்படியான நெருக்கடியான மன நிலையிலும் திரு.க.நவரத்தினராசா அவர்கள், ஆலயத்திற்கு அவசியமென்பதைக் கருத்திற்கொண்டு இம்முறை வரும்போது ஒலிபெருக்கி ஒன்றினை வாங்கிவந்து உபகரித்துள்ளார் என்பதனை எண்ணும்போது இறைவனின் மகிமையை எண்ணி வியக்கின்றேன்.

இக்கொடிய நோயாலும் ஒரு கால் இல்லாமையாலும் திருமதி ந.லதாமலர் அவர்கள் இனி வாழ்வது கஸ்டம் என நினைத்த இறைவன் தன் பதம் அழைத்து இருக்கின்றார் என்றால் மோட்சத்துக்கென்பதே எம் நம்பிக்கை.

*எல்லாம் இறைவன் துணை*



# உள்ளம் பெருங்கோயில்

**கலாநிதி.த.கலாமணி**
*சிரேஷ்ட விரிவுரையாளர்–கல்வியியற்றுறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

மனித வாழ்வு அநித்தியமானது என்பர். யாக்கை (உடம்பு), செல்வம், இளமை, உயிர் என வரும் நான்கும் நிலைபேறற்றவை.

நல்வினை, தீவினை என்பவற்றை இயற்றும் உடம்பு, உயிர் உள்ளவரைதான் வாழும். வாழும் காலத்தே வினைபோகங்களை அது அநுபவிக்கும். அந்தச் சுகபோகங்கள் எவ்வளவு காலம் நிலைத்திருக்கும் என அது அறியமாட்டாது. வாழும்போது ஒன்றாக உடனிருந்து சுகபோகங்களை அநுபவித்த மனைவி, மக்கள், உறவினர் எவருமே உயிர் பிரியும்வேளை உடன் வரார்.

மாடு, மனை, செல்வம் முதலிய நிலையாப் பொருட்களைத் தேட்டமாகக் கொள்ளலே மனித வாழ்க்கைக் குறியாக உள்ளது. 'பொருளிலார்க்கு இவ்வுலகில்லை' என்பது நடைமுறை யதார்த்தம். ஆயினும், எவ்வழியிலேனும் இவற்றைத் தேடவேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி, மனிதாயப் பண்பு சீரழிந்து போகிறது. போட்டியும் பொறாமையும் பூசலுமே எஞ்சிநிற்கின்றன. தேட்டமான செல்வத்தைப் பாதுகாக்கும் முயற்சியில் பயம் தொற்றிக்கொள்கிறது; நிம்மதி பறந்தேகுகிறது.

கட்டான உடலமைப்பும் தோள் வலிமையும் துடுக்குத்தனமும் நிறைந்தது இளமைப் பருவம். இப்பருவம் தரும் முறுக்கு பலரை வாழ்க்கையில் தவறான பாதையை நாட வைக்கிறது. பிறழ்வான

நடத்தைகளுக்குத் தூண்டுகிறது. இளமைப் பருவம் கடந்து முதுமைப்பருவம் வந்தெய்தும்போது, நரை, திரையும் தளர்வுமே உடலின் சொத்துக்கள். முதுமைப் பருவம் எய்தியவேளை, பிறரால் வெறுத்தொதுக்கப்படும் நிலையில் கடந்துபோன இளமைப் பருவத்தை எண்ணிக் கழிவிரக்கம் கொள்வதில் ஏது பயன்?

உடம்புக்கு ஊட்டம் உயிர். உயிரின் அருமை தெரியாதவர்கள் உடலை மட்டும் வளர்த்துக்கொள்கின்றனர். உயிரை வளர்க்கும் அற மார்க்கங்களை அறியாதவர்கள், கூற்றம் வந்துற்றபோது கொள்ளும் மரண பயம் மிகப்பெரிய வேதனை.

'புல்லாகிப் பூடாய் புழுவாய்' பரிணாமம் கொள்ளும் பிறவித்தொடரின் உச்சநிலை மனிதப்பிறவி. ஆறறிவு, மானிடர்க்கு வாய்த்த அரும்பொக்கிஷம். அநித்தியமான வாழ்வை அற்புதமான வாழ்வாக மாற்றும் இரசவாதம் ஆறறிவினாலேயே கைகூடும்.

மனிதப் பிறவியின் மேன்மையை, மானிட வாழ்வின் கடமையை அநுபூதிமான்கள் பலர் உணர்த்திச் சென்றனர். அவர்கள் உணர்த்திய அநுபூதி வெறும் பட்டறிவன்று; பிரமாணங்களைக் கொண்டு பெற்ற அனுமானம், அது. ஆயினும் இன்னதென விபரிக்க முடியாதது.

அநுபூதிமான்கள் அநுபூதிவழி உணர்த்திய சக்தி அநாதியானது. மன, மொழி, மெய்களுக்கும் அப்பாற்பட்டது. உயிர்களதும் அவற்றைச் சூழ்ந்த பிரபஞ்சத்தினதும் தோற்றம், நிலைத்தல், ஒடுக்கம் ஆகியவற்றின் கருத்தா அது.

அந்த அநாதியான சக்தி தன்னைப் படைத்தமைக்கான காரணம் காண மனிதன் விழைந்தான். அது, தன்மேல் கொண்ட பரிவால் என்றும் தன்னை உய்வித்தற்காய் என்றும், தன் துன்பத்தைத் துடைத்து இன்பத்தை அளித்தற்காய் என்றும் உணர்ந்தான். அந்த சக்திக்கு 'சிவம்' என்று நாமம் சூட்டினான். சிவம் என்பதற்கு அன்பு, ஆனந்தம், மங்கலம் எனப் பல பொருள் உண்டு. அன்பே சிவம்; அதுவே ஆனந்தம் தருவது; மங்கலம் தந்து மனைமாட்சி காண்பது.

'எவ்வுயிர்க்குள்ளும் ஈசன் உறைகின்றானாதலின் உயிர்களிடத்து அன்பு செய்வீர்' என்று அநுபூதியர் உரைத்த தத்துவம், 'இறைவன் சர்வவியாபகர்' என்ற பதியிலக்கணம் உணர்த்துவது. மானிட லௌகீக வாழ்வில், இல்லற வாழ்வில் நின்று உயிர்களிடத்தில் அன்பு செய்யின் ஆனந்தமும் மங்கலமும் வந்தெய்தும். இல்லற வாழ்வு வழி வந்த நிலையில்லாத செல்வத்தைக் கொண்டு நிலைபெற்ற அறச்செயல்கள் இயற்றின், நிலைபேறாய் - நிலையான

செல்வமாய் - இறை அருள் சித்திக்கும். இறை அருள் சித்திப்பின் அந்த இறை அருளை எண்ணுதலால் மரண பயம் நீங்கும்.

இறைவன் அருபன். அருபமாம் அந்த ஆதிசக்திக்கு உருபாருபம், ரூபம் முதலிய திருவுருவங்கள் அருளாளர் காட்சியில் உதிக்க, இயற்கையின் எழில்மிகு தோற்றங்களும் பஞ்சபூதங்களும் உதவின. எந்தெந்த வடிவில் இறைவனை உள்ளினாரோ அந்தந்த நிலையில் அவரை வழிபட்டனர். இவை எல்லாம் மூர்த்தங்களாயின. மந்திரங்கள் உருவேறத் திருவேறும் என்பர். அவ்வாறே வணங்க வணங்க, இந்த மூர்த்தங்களும் அருள் சுரப்பனவாகும்.

இறைவன் சர்வவியாபகராயினும் - அவர் எங்கும் நிறைந்திருப்பினும் - அவர் அருள் சுரக்கச் சிறப்புடன் விளங்குமிடம் ஆலயமே. உலகத்தை ஒரு பசுவாக உருவகித்தால் , பசுவின் பால்வயிறு - அதன் மடி - ஆலயமே. கறக்கக் கறக்கப் பால் சுரப்பதுபோல், பூசிக்கப் பூசிக்க விக்கிரகமும் அருள்சுரக்கும்.

உயரியவர் உள்ளமே இறைவனை உணரவைக்கும் உள்ளுறுப்பு. காற்றும் வெளிச்சமும் புகமுடியாத அந்த உள்ளமே இறைவன் விருப்போடு வதியும் இடமாகும். இதனையே திருமூலர் ‘உள்ளம் பெருங்கோயில்’ என்றார்

உள்ளம் கோயிலாய் வாய்க்கப்பெற்றவர் அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட நவரத்தினராசா லதாமலர். மானுட வாழ்வின் நிலைபேறு உணர்ந்தவராய் வாழ்ந்தவர் அவர். அவர் உள்ளத்தில் குமுதெணிப் பிள்ளையார் என்றும் குடிகொண்டிருந்தார்.

ஐம்பது வருடங்கள் இப்பூவுலகில் வாழ்ந்தாலும், இல்லற வாழ்வின் சிறப்புணர்ந்து குடும்பத்தில் ஒற்றுமையாய் வாழ்ந்தவர், லதாமலர். பொருள் தேடி, கணவன் மேலைநாடு சென்றபோது, அவரோடு அங்கு சென்று இன்புற வாழ்ந்து, தனது கடமை உணர்ந்து இந்தியா சென்று பிள்ளைகளை ஆளாக்கி உயர்கல்வி பெறவைத்தவர், அவர்.

தமது குலதெய்வமான குமுதெணிப் பிள்ளையார்மீது லதாமலர் கொண்டபக்தி, இறைஅருளே நிலையான செல்வம் என அவர்க்கு உணர்த்திற்று. அந்த இறை அருளில் மலர்ந்த அன்புள்ளம், தனக்காய், தமர்க்காய் மாத்திரமன்றி பிறர்க்கும் இறை அருள்வேண்டிற்று. லதாமலருக்கு நிலைபேறாய்க் கிடைத்த இறை அருளே, தனக்காகத் தன் கணவன் சேமிப்பிலிடும் பணமெல்லாம் குமுதெணிப் பிள்ளையாருக்கே என்று சொல்லவைத்தது. அந்த

அன்புள்ளம் தனது நோயின் எல்லையிலும் தன் எண்ணத்தைத் தன் கணவரிடம் 'வாக்காய்' பெற்றுக்கொண்டது.

லதாமலர் 'வாக்காய்'ப் பெற்றுக்கொண்டதை நிறைவேற்றித்தரும் நல்லோராய் அவர் கணவர். தனது மனைவியைப் பிரிந்த சோகம் முற்றாக நீங்காத நிலையிலும் - ஒரு வருடத்திற்குள்ளாக - 'இறைபணியை நிறைவேற்றின் அதுவே தன் மனைவிக்கு ஆத்மசாந்திதரும்' என அவர் தன் மனைவிமீது கொண்ட அன்பை வெளிப்படுத்தினார். இவ்வெளிப்பாடு, குமுதெணிப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் தோரணவாயில் மணிமண்டபமாய் உயர்ந்து நிற்கிறது.

அன்பு நெறி தழைத்தோங்க, இறையருளில் இவ்வுலகம் உய்ய விழையும் அன்புள்ளமொன்றின் நினைவுச் சின்னமாய் விளங்கும் தோரணவாயில் மணிமண்டபம், வழிவழியாய் வரும் எம் சந்ததியினர்க்குக் கதை கூறும்; நிலைபேறான செல்வம் இறை அருளே என வழிகாட்டும்.



## மணிமண்டப வரலாறு

திருவருள்மிகு குமுதெணிப் பிள்ளையார் தேவஸ்தானம் தொன்மை மிக்க கலை மலித கோவிலாக மிளிர்கின்றது. இது இறையருட் கொடையாக பல விழுமியங்களைச் சுமந்துவருகின்றது. இத்தகைய அருட் சுரக்கும் ஆலயம் அமைந்த சூழல் மிகவும் போற்றத்தக்கது. விநாயகரின் மூர்த்தி பேதங்களில் அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் ஆலயம் படிப்படியாக வளர்ச்சியடைந்து மகாமண்டபம், தம்ப மண்டபம், தரிசன மண்டபம் தாண்டி வெளி முகப்பு மண்டபம் அமையப்பெற்று தோரண வாசல் அல்லது மணிமண்டபம் என்ற அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய முறையில் அமைந்துள்ளது.

இது லதாமலர் ஞாபகார்த்தமாக அமைந்த இம்மண்டபம் பலவிதமான கருசனைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஏன் எதற்கு என்ற கேள்விகளுக்கப்பால் ஆத்மார்த்த சிந்தனையுடன் இம்மண்டபம் அமையப்பெற்றது.

வசந்த மண்டபம் உள்ளடையாக சுவாமி எழுந்தருளியிருக்கும்போது வெளிமண்டபமாகிய இம்மண்டபம் பதுமைகளை அல்லது மணிபோன்ற நிலையில் அமையப்படுவதால் "மணிமண்டபம்" என்றும் முகப்பு மண்டபம் அல்லது தோரணம் என்ற சொல் முதல் என்ற கருத்தைத் தருவதால் தோரண மண்டபம் என்றும் கூறப்படும்.

இதன் தேவை திருக்கயிலையில் அத்தனை ஜீவராசிகளும் சிவன் திருமணக்கோலம் அல்லது பார்வதி திருக்கல்யாணக் காட்சி காண்பதற்குச் சென்றபோது இடம் காணாது தவித்தார்கள்.

அச்சமயம் தேவதச்சன் எனும் 'மயன்' என்பவனால் நிர்மாணிக்கப்பட்டதே "மணிமண்டபம்" அல்லது தோரண முகப்பு மண்டபம் ஆகும்.

அக்கரு காட்சிக் கொண்டு பின் எழுந்த கோவில்களில் "மயன்" காலத் திருமுறைப்படி அமைக்கப்படும் ஆலயங்களில் மணிமண்டப முறையும் ஒன்று. அதன்மேல் பாதம் போன்ற அமைப்பில் அமைக்கப்படுவது இராஜகோபுரம் ஆகும்.

அவ்வண்ணம் அமைக்கப்பட்ட இம் மண்டபம் சமய முறைப்படியும் சாஸ்திர முறைப்படியும் ஆனதாகும்.

சுபம்



*குமுதெணி விநாயகர் ஆலய*
*தோரண வாயில் மணிமண்டபம் சிறப்புற அமைவதில்*
*பங்குகொண்ட அன்பர்களுக்கு தெரிவிக்கும் நன்றிகள்....*

- தோறண வாயில் மணிமண்டபத்தை அமைப்பதற்கு உரிய அளவு பிரமாணங்களுக்கு ஏற்ப நிலையத்தை வகுத்து தந்துதவிய புலோலி மேற்கு தம்பசிட்டி ஆச்சாரியார் திரு.வேலுப்பிள்ளை அவர்களுக்கு நன்றிகள்

- மண்டபத்திற்கான நாள் அத்திவாரத்தினை தொடர்ந்து ஆரம்ப வேலைகளான தூண் வேலைப்பாடுகளை துரிதமாகவும் அமைப்பதில் தனது குழுவினரோடு மேற்கொண்ட பிரதம மேஸ்திரி யார் வயல், அல்வாய் வடக்கு, திரு.செல்வமாணிக்கம் செல்வலிங்கம் அவர்களுக்கு நன்றிகள்.

- மண்டபத்தின் வளைவு வேலைகள், முகப்பு வேலைகள், மண்டப காவல் தெய்வங்களான துவாரபாலகர்கள் ஆகியவற்றை குறுகிய கால எல்லைக்குள் வடிவமைத்து நிறைவேற்றி தந்த மூளாய், சுளிபுரம் ஆலடியைச் சேர்ந்த சிற்பாசாரியார் திரு.நித்தியானந்தன் ஆனந்த சித்திரசேனன் (சித்திரன்) அவர்களுக்கும் அவர் சார் குழுவினருக்கும் நன்றிகள்.

- மண்டப முகப்பிற்கும், திருவாசி வளைவிற்கும் மணி, இலை என்பவற்றை மண்டபம் அழகுபெறும் வகையில் வடிவமைத்துதந்த புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு திரு.குலநாயகம் சுசீகரன் அவர்களுக்கும் நன்றிகள்.

- மண்டபத்தின் பாதுகாப்பிற்காக சுற்றிவர அமைக்கப்பட்ட இரும்பு கிறில் வேலைகளை மிக நேர்த்தியாக வடிவமைத்து தந்தவகையில் திரு.தவயோகநாதன் றமணன் (பூம்புகார்) அவர்களுக்கும் நன்றிகள்.

- மண்டப கட்டுமான வேலைகளுக்கு ஏற்ற மணல், சல்லி ஆகியவற்றை தேவை அறிந்து உரிய வேளையில் வழங்கிய அல்வாய் வடமத்தி, கூத்தாடியம்பதியைச் சேர்ந்த பார ஊர்தி உரிமையாளர் திரு.சிவசேகரன் அவர்களுக்கும் நன்றி.

- மண்டபத்திற்கான மின் அமைப்பு வேலைகளை திறம்பட அமைத்து, அழகு பெறும்வண்ணம் மின்விளக்குகள் பொருத்தி தந்த அல்வாய் திரு.கிருஷ்ணானந்தம் பவிகரன் அவர்களுக்கும் அவர்சார் குழுவினருக்கும் நன்றிகள்.

- எல்லாவற்றுக்கும் மேலாக மண்டப வர்ண வேலைப்பாடுகள் ஊடாக மண்டபத்தை பிரமிக்கத்தக்கவகையில் அழகுற அமைத்து தந்த பருத்தித்துறை தும்பளை கிழக்கைச் சேர்ந்த (ரவி ஆட்ஸ்) குழுவினருக்கும் நன்றிகள்.

- மண்டபத்திற்கான வேலை ஒழுங்கமைப்புக்களை அடிக்கடி தொடர்புகொண்டு எம்மோடு இணைந்து மேற்கொண்ட அல்வாய் வடமத்தி அணியாவோடை தவராஜலிங்கம் ஜீவதர்சன் அவர்களுக்கும் நன்றிகள்.

- மேலும் எல்லா வகையிலும் கட்டிட அமைப்புக்கான பணிகள் காலமறிந்து பல வகையிலும் மேற்கொண்ட எமது ஆலய தொண்டர்களுக்கும் நன்றிகள்

- இம்மலருக்குரிய ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள், கட்டுரைகள் ஆகியவற்றை வழங்கியுதவிய ஆலயங்களின் பரிபாலன சபைகள், சிவஸ்ரீ.தியாக.சோமாஸ்கந்தராஜாக் குருக்கள், கலாநிதி.தம்பியையா கலாமணி ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்

- இன்றைய மணிமண்டப உபகரிப்பு நிகழ்வுக்குரியதும் நினைவுரைகளுமென உரையாற்றிய பெருந்தகைகளுக்கும் விஷேட உரைஞர்களாக வருகை தந்து சிறப்பித்த யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி அவர்களுக்கும் விரிவுரையாளரான திரு.இரா.இராஜேஸ்கண்ணன் அவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

- இன்றையதினம் வருகைதந்து சிறப்பித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

*இவ்வண்ணம்*

**கணபதிப்பிள்ளை நவரத்தினராசா, நவரத்தினராசா மேகரூபன்(மகன்)**
**நவரத்தினராசா மேகரூபன், நவரத்தினராசா சுவீபன்,**
**நவரத்தினராசா நிஷரிகா**





மதுரன் கிறா(f)பிக்ஸ் & ஒவ்செற் பிறின்ரேர்ஸ், அல்வாய்.

தொ.பே: 021 226 3099, 0776688318.